

மது அருந்துவதால் நன்மை ஏதுமில்லை. மதுவில் சத்து ஏதுமில்லை. ஆகவே செயல் ஆற்றல் அதிகமாகாது. அதை அருந்தினால் மயக்கம்தான் வரும். மயக்கத்தில் நமது பிரச்சினைகள் எல்லாம் மறந்து போகும். மயக்கம் போனதும் அந்த பிரச்சினைகள் எல்லாம் அங்கேயே இருப்பது தெரியவரும்.




**மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள்:**

மது வலிமை, சக்தி, வேகம், தசையின் செயற்பாடு, இருதய குருதி ஓட்டம் ஆகியவற்றைக் குறைக்கும். மது உடலில் எல்லா பாகங்களையும் அமைப்புகளையும் கெடுக்கும். முக்கியமாக கல்லீரலை மிக மோசமாகக் கெடுக்கும். அதாவது உடல் நலம் முழுமையாகக் கெடும்.





குடும்பத் தலைவர் குடிப்பதால் அவர் உடல் நலம் கெடும். குடும்ப வருமானம் குறையும். குடும்பத் தலைவர் தன் வருவாய் முழுவதையும் குடிப்பதற்கே செலவு செய்வதால் குடம்பத்தாருக்கு நல்ல உணவும் உடையும் கிடைக்காது. மொத்தத்தில் குடும்பத்தில் வறுமைத் தாண்டவமாடும்.




**மதுவிலக்கால் பெறும் நன்மைகள்:**

மதுவுக்கு அடிமை ஆகாதாவர் தனக்கு வரும் பிரச்சனைகளை மது அருந்தி மறக்க முயல மாட்டார். தனது மதியைப் பயன்படுத்தி தீர்த்து விடுவார்.

மதுவுக்கு அடிமையானவர் உடல், மனம், உணர்வு, ஒழுக்கம், உறவு ஆகியவற்றில் எல்லாம் பாதிக்கப்பட்டு இருபாபார். அவர் மதுவிடமிருந்து மீட்கப் படும்போது அவர் உடல் நலம் பெறுவார். மனம் தூய்மை பெறும். உணர்வுகள், ஒழுக்கம், உறவு ஆகியவை மேம்படும். அவர் குடும்பத்தினருக்கு நல்ல உணவு, உடை கிடைக்கும். குழந்தைகள் நிம்மதியாக பள்ளிக்குச் சென்று கல்வி கற்பர். மொத்தத்தில் குடும்பத்தில் மகிழச்சி நிலவும்.

**செய்ய வேண்டியவை:**

குடிப்பது பெருமை அல்ல. வெட்கப்பட வேண்டியது. குடிகாரர் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் அவருக்கு மரியாதைத் தராதீர்கள்.



**மதுவிலக்கால் மதி வளரும். மகிழ்ச்சி பெருகும். நீங்களும் மகிழ்ச்சியுடன் வாழ உங்கள் வீட்டிலும் மதுவை விலக்குங்கள்.**

நகல்கள் பல எடுத்து உங்களுக்குத் தெரிந்தவர்கள் அனைவருக்கும் அளிக்க வேண்டுகிறோம்.

ச. முத்துக்குமரன்
முன்னாள் துணைவேந்தர்
9840516540

படங்கள் : ஓவியர் ரஜனி, 9677248087




# மதுவை விலக்குவோம்

## மதியை வளர்ப்போம் !
## மகிழ்ச்சியைப் பெருக்குவோம் !

நீங்கள் உங்கள் ஆயுளில் இருபது ஆண்டுகள் குடித்தீர்கள் என்றால் ஒரு பயனும் இல்லாததற்காக பத்து இலட்சம் செலவு செய்திருப்பீர்கள். அதை நீங்கள் சேமித்திருந்தால் அது முப்பது இலட்சம் ஆகியிருக்கும். அதில் நீங்கள் ஒரு நல்ல வீட்டை வாங்கி இருக்காம் அல்லது உங்கள் குழந்தைகளை மேல் படிப்பு படிக்க வைத்திருக்கலாம்! மயக்கும் மதுவைக் குடித்து இவற்றை எல்லாம் நீங்கள் இழந்திருக்கிறீர்கள்! ஆகவே நீங்கள் இத்தனை நாட்கள் குடித்ததற்காக வெட்கப்பட வேண்டும்.

**நீங்கள் மதுவை மறந்தால்**

நீங்கள் மதுவை மறந்தால் உங்கள் உடல் நலம்பெறும். மனம் தூய்மை பெறும். உணர்வுகள், ஒழுக்கம், உறவு ஆகியவை மேம்படும். உங்கள் குடும்பத்தாருக்கு நல்ல உணவு, உடை கிடைக்கும். குழந்தைகள் நிம்மதியாக பள்ளிக்குச் சென்று கல்வி கற்பர். மொத்தத்தில் குடும்பத்தில் மகிழச்சி நிலவும். மது விலக்கால் மதி வளரும். மகிழ்ச்சியுடன் வாழ மதுவை விட்டு விலகுங்கள்.



குடிக்கு அடிமையாகாதீர்கள்.
குடும்பத்துக்காக உழையுங்கள்

நகல்கள் பல எடுத்து உங்களுக்குத் தெரிந்தவர்கள் அனைவருக்கும் அளிக்க வேண்டுகிறோம்.

**ச. முத்துக்குமரன்**
முன்னாள் துணைவேந்தர்
**9840516540**

படங்கள் : ஓவியர் ரஜனி, 9677248087



# குடிக்கு அடிமையாகாதீர்கள்.

# குடும்பத்துக்காக உழையுங்கள்.

**உங்கள் உடல் நலம் கெடுகிறது. உங்கள் வருவாய் குறைகிறது.**

மது வலிமை, சக்தி, வேகம், தசையின் செயற்பாடு, இருதய குருதி ஓட்டம் ஆகியவற்றைக் குறைக்கும். மது உடலில் எல்லா பாகங்களையும், அமைப்புகளையும் கெடுக்கும். முக்கியமாக கல்லீரலை மிக மோசமாகக் கெடுக்கும். அதாவது நீங்கள் குடிப்பதால் நீங்களே உங்கள் உடல் நலத்தை முழுமையாகக் கெடுத்துக் கொள்கிறீர்கள். உங்கள் வருவாயும் குறைகிறது.



**நீங்கள் தாழ்வடைகிறீர்கள்.**

நீங்கள் மது குடிப்பதற்கு நிறைய செலவு செய்வதால் உங்களது அத்தியாவசிய செலவுகளுக்கு உங்களிடம் பணம் இல்லை. அதனால் உங்கள் வாழ்க்கைத் தரம் தாழ்வடைகிறது. அதாவது மற்றவர் கண்களில் நீங்கள் தாழ்வடைகிறீர்கள. நீங்கள் குடித்துவிட்டு மயங்கிக் கிடந்ததைப் பார்ப்பவர் கண்களில் நீங்கள் மேலும் தாழ்ந்து போகிறீர்கள். மற்றவர்கள் அதை உங்களிடம் சொல்ல மாட்டார்கள். ஆனால் நீங்கள் கவனித்தால் அதை உணரலாம்.



**உங்கள் உழைப்பை ஏன் வீணாக்கவேண்டும்?**


நீங்கள் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாரித்த பணத்தை நீங்கள் ஏன் வீணாக மதுக்கடைக்குக் கொடுக்கிறீர்கள்? நீங்கள் ஏன் உங்கள் உழைப்பின் பலனை உங்கள் குடும்பத்துக்குக் கொடுக்காமல் மதுக்கடை மூலமாக அரசுக்குக் அளிக்கிறீர்கள்?






**நீங்கள் ஏமாற்றப்படுகிறீர்கள்!**

மதுக்கடைகளை மூடினால் மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்த அரசிடம் பணம் இருக்காது என்கிறது அரசு. அதாவது மதுக்கடை வருவாயில்தான் இலவசங்கள் தருகிறோம் என்கிறது! உங்களைக் குடிக்க வைத்து உங்களிடம் உள்ள பணத்தைப் பிடுங்கிக் கொண்டு அதில் ஒரு பகுதியை உங்கள் குடும்பத்துக்கு இலவசமாகத் தந்து நல்ல பெயர் வாங்கிக் கொள்கிறது! அதாவது நீங்களும் உங்கள் குடுப்பமும் ஏமாற்றப் படுகிறீர்கள். நீங்கள் குடிப்பதை நிறுத்தி நேராகவே உங்கள் பணத்தை உங்கள் குடும்பத்துக்குக் கொடுத்து கௌரவமாக வாழலாமே! நீங்கள் ஏன் ஏமாற வேண்டும்?




**நீங்கள் குடிப்பதை நிறுத்தினால்**

அரசு மதுக்கடை விற்பனையை வைத்துப் பார்த்தால். நீங்கள் குடிப்பதற்காக நாளும் சற்றேறக்குறைய 150 ரூபாய் செலவு செய்கிறீர்கள். அதாவது ஆண்டுக்கு ஐம்பதினாயிரம் ரூபாயாவது செலவு செய்கிறீர்கள் மதுவில் சத்து ஏதும் இல்லை. அது மயக்கத்தை மட்டுமே தரும், அதாவது குடிப்பதால் உங்களுக்கு ஒரு பயனும் இல்லை.